முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட

இன்றே நாடுங்கள்

ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

பக்கங்கள்: ஆறு விலை: ரூபா 5-00 Registered as a Newspaper

# உதயன்

ஆடவர், [illegible]யர்
விரும்பும் [illegible]ழகு
வண்ணப் புடைவைகளுக்கு

சிறந்த இடம்!

ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 10 புதன்கிழமை (26-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 243

# புத்தளத்தில் புலிகள் அதிரடி!
# 6 படையினர் உயிரிழப்பு!!

## ஏழு இராணுவத்தினர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 26

புத்தளம் இலவன்குளம் பகுதியில் நேற்றுக் காலை 5-30 மணிக்கு விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர்; மேலும் ஏழு படையினர் படுகாயமடைந்தனர்.

புத்தளத்துக்கு வடக்கே 26 கிலோமீற்றர் தொலைவில் — வில்பத்து சரணாலயத்துக்கு அண்மையில் — இலவன் குளம் பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

முகாம் திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீது சுமார் நூறுபேரைக்கொண்ட போராளிகள் குழு ஒன்று அதிரடித் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது

இறந்தபடையினரில் செபஸ்டியன், சந்திரானந்த, சுனில் குமார, சாந்த பிரேமசிறி,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவை கொல்ல புலிகள் ஊடுருவலாம்

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி சந்திரிகாவையும் மற்றும் இரு அமைச்சர்களையும் கொலை செய்வதற்காக வெடிப்பொருள்களுடன் புலிகளின் தாக்குதல் பிரிவு உறுப்பினர்கள் சிலர் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்துள்ளன. (உ-6)

## நேற்றிரவு நகரை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நேற்றிரவு 9.30 மணியளவிலும், 10.30 மணியளவிலும் பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ் நகரப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஷெல் குண்டுகள் பண்ணை மற்றும் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

நேற்றிரவு 10.30 மணிக்கு ஆட்லறி ஷெல் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து யாழ். நகர கடற்பிராந்தியத்திற்கு மேலாக பரா வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு எரிந்து கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (ஓ-4)

## மண்டைதீவு ஷெல்லுக்கு குருநகரில் 9 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று மாலை 5.40 மணியளவில் குருநகர் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இச் சம்பவத்தில் 9 பொது மக்கள் காயமடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

ஆர். பிரதீபா [30 வயது], சர்மிளா (15வயது), ஏ.நிசாந்தினி [11 வயது). ஏ.பிறேமா (30 வயது), வி. அன்ரனிஸ் (11 வயது], எஸ். விகோரி [65வயது], ரி. அஜித் [4வயது] ரி. சந்திரா [33 வயது], ஏ. திரேசம்மா [35 வயது].

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-4)

## அரச ஊழியர்களுக்கு அலவன்ஸுகள் நிறுத்தம்

### சம்பளம் மட்டுமே கிடைக்கும்

யாழ்ப்பாணம். ஜூலை 26

அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் சம்பளம் மட்டுமே வழங்கப்படும் ஏனைய அலவன்ஸுகள் யாவும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

திறைசேரியில் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் முதல் மறு அறிவித்தல் வரை ஊழியர்களுக்கு சம்பளத்தை மட்டுமே வழங்குமாறு திறைசேரி சுற்று நிருபம் ஒன்றை சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

சம்பளம் தவிர்ந்த மேலதிக வேலைப் படி, போக்குவரத்துப் படி, வேலைக் ஊக்குவிப்புப்படி (பட்டா), போன்றவற்றை வழங்கவேண்டாம் எனப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச செயலகங்களில் மேற்கொள்ளப்படும் சிறிய வேலைகளையும் நிறுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (ஓ-3)

## நவாலி சம்பவம் குறித்து ஜெனிவாவில் பிரஸ்தாபம்

கொழும்பு, ஜூலை 26

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஜெனிவாவில் கூடியது. 18 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கு கொண்ட இக்குழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்காவின் மனித உரிமை பேணல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையும் ஆராயப்பட்டது.

நவாலி தேவாலய குண்டு வீச்சு மரணங்கள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தமிழ் இளைஞர், யுவதிகள் காரணமின்றி கைது செய்யப்படல், திடீரென தமிழர்கள்

[ 5 ஆம் பக்கம் பார்க்க]

### ஊழல் குற்றச்சாட்டு:

## முன்னாள் தளபதி சிசிலை பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஜூலை. 26

பதவியில் இருந்த சமயம் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவை பொலீஸார் விசாரணை செய்துவருவதாக அறிவிக்கப்படுகின்றது.

பிரித்தானிய விநியோகஸ்தரிடம் இருந்து ஏழு கோடி இருபது லட்சம் ரூபா பெறுமதிக்கு பாரிய தொடர்பு சாதனங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாகவே அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

சிசில் வைத்தியரத்ன வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்லாமல் இருப்பதற்காக அவரது கடவுச் சீட்டு அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-6)

### "புலிப்பாய்ச்சல்" தாக்குதலால் பீதி!

# யாழ். நகரைக் கைப்பற்றும் திட்டம் அரசு கைவிட்ட[illegible]

## "த ஐலண்ட்" பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜூலை 26

பெருமளவு படைகளை ஒன்று திரட்டி யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றும் உடனடித் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது என்ற தகவலை—

"த ஐலண்ட்" ஆங்கில நாளிதழ் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

அரசின் "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கைக்கு எதிராக கடந்த ஜூலை 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய "புலிப் பாய்ச்சல்" தாக்குதல் அரசின் திட்டத்தை தவிடு பொடியாக்கியிருப்பதாகவும் அச்செய்தியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைப் பயன்படுத்தி யாழ். நகர் மீது தாக்குதல் தொடுக்க உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் முன்னர் திட்டம் தீட்டியிருந்தனர்.

ஆனால் ஜூலை 14 ஆம் திகதி புலிகள் நடத்திய தாக்குதல் அரசுப் படைகளை தமது முன்னைய நிலைகளுக்குப் பின்வாங்க வைத்ததுடன் யாழ். நகரைக் கைப்பற்றும் திட்டத்தையும் கைவிட வைத்துவிட்டதாக அப்பத்திரிகை குறிப்பிட்டது.

காரைநகரையும் யாழ். குடாநாட்டையும் இணைக்கும் நிலப் பாதையைத் திறக்கவும்—

வார்த்தை ஒற்றுமை குறித்தும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் அதிகாரி பலி

கொழும்பு, ஜூலை 26

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றில் பொலீஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் நான்கு பொது மக்கள் காயமுற்றதாகவும் செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது. [உ-6]

## அம்பாறையில் மோதல்; 3 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 26

அம்பாறை திருக்கோவில் பகுதியில் விஷேட அதிரடிப் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத நேரடி மோதலின் போது 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் லெனின் (தங்கராஜா நிதிராஜா — அம்பாறை), 2 ஆம் லெப். வர்ணன் (விநாயகம் சுதாகரன் — அம்பாறை), வீரவேங்கை கங்கையன் (சோமசுந்தரம் சுவேந்திரன் — அம்பாறை) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர்.

## கடற்படை குழு விசாரணை

கொழும்பு, ஜூலை. 26

'எடித்தரா' கடற்படைக் கப்பல் தகர்ப்புத் தொடர்பாக கடற்படை அதிகாரிகள் குழு ஒன்று விசாரணையை ஆரம்பித்துள்ளது. கொமடோர் எல். மெண்டிஸ் தலைமையில் விசாரணை நடைபெறுகிறது.

இக்குழுவினர் விசாரணைக்காக காங்கேசன் துறைக்குச் செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஓ-4)

## டாங்கிகளை அழிக்கக் கூடிய நவீன ஆயுதம் புலிகளிடம்

### இராணுவ புலனாய்வுத்துறை தகவல்

கொழும்பு ஜூலை 26

யுத்த டாங்கிகளை அழிக்கும் வல்லமை கொண்ட நவீன ஆயுதங்கள் புலிகள் வசம் உள்ளதாக இராணுவப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்தன.

நடந்து முடிந்த "முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையின் போது இவ்வாறான ஆயுதத்தை பயன்படுத்தியே ரீ. 55 ரக ரஷ்ய யுத்த டாங்கியை விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கினர் என்றும்—

இதே போன்றே ஆயுதம் நிரப்பி வைக்கப்பட்ட 2 டிரக் வண்டிகள் புலிகளின் 120 மி.மீ றொக்கட் வீச்சுக்கு இலக்காகி நிர்மூலமானது என்றும்— அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டன.

## இரகசிய பொலீஸாருக்கு தகவல்

கொழும்பு, ஜூலை 26

தாக்குதல் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகக் கொழும்புக்கு வரும் விடுதலைப் புலிகளுக்கு இரகசியமாகத் தங்குமிட வசதி வழங்கி வரும் 15 ஹோட்டல்கள் தொடர்பாக இரகசியப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

24-12-94 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் எமது அறிவித்தலின் நியதி நிபந்தனைகளுக்கு அமைவாக பின்வருவனவற்றிற்கு திரும்ப கேள்விகள் 07-08-95 மு.ப 10.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். விவரங்களை எமது பணிமனைகளில் அறிந்து கொள்ளலாம்.

01. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை
02. கொடிகாமம் கருவாட்டுக்கடை இல. 1
03. கொடிகாமம் கருவாட்டுக்கடை இல. 2
04. மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை
05. எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை
06. மிருசுவில் வடக்குச் சந்தை
07. கைதடி ஆட்டிறைச்சிக் கடை

ஒப்பம்:
பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

கொடிகாமம்
1995-07-21

[சி/1946]

யாழ். மாவட்ட
## வெதுப்பக உரிமையாளர் சங்கம்
# எழுதுவினைஞர் தேவை
[பெண்]

கல்வித் தகைமை:- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி. அத்துடன் க.பொ.த சாதாரண பரீட்சையில் கணிதத்திற்கு விசேட சித்தியும் இருத்தல் வேண்டும்.

வயது:- 40 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- பேசித் தீர்மானிக்கப்படும்.

★ முன்னர் எழுதுவினைஞராக கடமையாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ சிபார்சு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர் விவரங்களை குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பங்களை 4 - 8 - 95 பிற்பகல் 4-00 மணிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

[சி/1947]

நாற்பத்தைந்தாம் நாள்
# நினைவு கூரல்



## நித்தியசிவம் கௌரிபாலன்

மலர்வு: 28 09-1970 | உதிர்வு; 12-06-1995

அந்தர வெளியில் விட்டு
அகாலமாய்ப் பிரிந்து போனாய்
உயிர்த்திரையில் உருவெழுதி
உச்சரிக்கின்றோம் நின் பெயரை.

— குடும்பத்தினர்

3 ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

(37728)

# அறிவித்தல்

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம் — சுன்னாகம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 28 - 07 - 1995 காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன மண்டபத்தில் பகுதி நேர விரிவுரையாளர்கள், மாணவர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

— அதிபர்

(37730)

# பனிக்கட்டி விற்பனை

பனிக்கட்டி விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

புறோ மோட்டோஸ் எஞ்ஜினியரிங்
கொம்பனி லிமிட்டெட்
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[37731]

# பிற்போடப்பட்டுள்ளது

யாழ்/ தொழில்நுட்பக் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தால் 26 - 07 - 1995 [புதன்கிழமை] இன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

வணிக மாணவர் மன்றம்
(பகல்)
தொழில்நுட்பக்கல்லூரி.

(37727)

# முக்கிய அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளை அவதானித்து செய்முறை வகுப்புக்களுக்கும், விரிவுரைகளுக்கும், போதனா வைத்தியசாலையில் நடைபெறும் பயிற்சிகளுக்கும், பரீட்சைகளுக்கும் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. **மருத்துவ பீடம்**
போதனா வைத்தியசாலை பயிற்சிகள் 31-7-95 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.
17-7-95 இல் நடைபெறவிருந்த 2 ஆம் வருட எம்.பி.பி.எஸ். பரீட்சை 21-8-95 இல் நடைபெறும்

2. **விஞ்ஞான பீடம்**
விரிவுரைகளும், செய்முறை வகுப்புக்களும் 31-7-95 இல் மீண்டும் ஆரம்பமாகும். மாணவர்கள் அனைவரும் தத்தம் துறைத் தலைவர்களை 31-7-95 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

3. **விவசாய பீடம்**
விரிவுரைகளும் செய்முறை வகுப்புக்களும் 31-7-95 இல் ஆரம்பமாகும்.

4. **சித்த மருத்துவத்துறை**
விரிவுரைகளும் செய்முறை வகுப்புக்களும் 31-7-95 இல் ஆரம்பமாகும்.

5. **கலைப்பீடம்**
பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (முழுநேரம்) நெறிக்கான விரிவுரைகள் 31-7-95 இல் ஆரம்பமாகும்.
பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (பகுதிநேரம்), தொழிலாளர் கற்கைநெறி, புறநிலைப்படிப்புகள் அலகு ஆகிய நெறிகளுக்கான விரிவுரைகள் 5-8-95 இல் ஆரம்பமாகும்.
கலைப்பீட ஏனைய கல்வித்துறைகளுக்கான விரிவுரைகள் 7-8-95 இல் ஆரம்பமாகும்.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
1995-07-25.

(சி-1948)

உ
அருள் மிகு
இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள்
கோவில்
கல்வியங்காடு

# மஹோற்சவ விஞ்ஞாபனம்
## விஷேச உற்சவங்கள்

அம்பிகை அடியார்களே

8 ஆம் நாள்: 27-07-95 வியாழக்கிழமை இரவு மஞ்சத்திருவிழா

9 ஆம் நாள்: 28-07-95 வெள்ளிக்கிழமை இரவு குதிரை வாகனத் திருவிழா (வேட்டைத் திருவிழா)

10 ஆம் நாள்: 29-07-95 சனிக்கிழமை இரவு சப்பரத் திருவிழா

11 ஆம் நாள்: 30-07-95 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழா

12 ஆம் நாள்: 31-07-95 திங்கட்கிழமை
காலை 7 மணிக்கு ஆடிப்பூர அபிஷேகமும் பூரகர்மமும் நடைபெற்று காலை 09.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும்
மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று துவஜாவரோகணம் [கொடி இறக்கம்], சண்டேஸ்வரி உற்சவம் நடைபெறும்

13 ஆம் நாள்: 01-08-95 செவ்வாய்க்கிழமை மாலை 4 00 மணிக்கு வசந்த மண்டபபூசை நடைபெற்று அம்பாள் தெரு வீதி உலாவரும் காட்சி இடம் பெறும்

14 ஆம் நாள்: 02-08-95 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பிராயச் சித்த அபிஷேகம் நடைபெறும்

இங்ஙனம்
சு. பாலசுப்பிரமணிய ஐயர்
ஆலய உரிமையாளரும், ஆதீனகர்த்தாவும்
பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
ஆலய நிர்வாகம்

[37735]

# யாருடையது?

யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு அருகாமையில் சிறு தொகைப் பணத்துடன் கூடிய பெண்களுக்கான சிறு கைப்பை ஒன்று சேரன் ஊழியரால் கண்டெடுக்கப்பட்டு சேரன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

பணிமனை
சேரன் பல்பொருள் வாணிபம்,
''கேணல் கிட்டுசாலை''
யாழ்ப்பாணம்.

[37723]

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி. விமலா தம்பிநாயகம்
[Accounts Clerk, Mc Leod Hospital Inuvil]

எமது அன்பிற்குரியவரும் சக ஊழியருமான செல்வி விமலா தம்பிநாயகத்தின் அகால மரணத்தையிட்டு துயருறும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்லோட் வைத்தியசாலை
வைத்தியர்களும் சக ஊழியர்களும்

(சி/1949)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ஆதித்தனின் தந்தையார்
## இராசையா குலேந்திரன்

அவர்களின் மறைவையிட்டு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

நண்பர்கள்

[37736]

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியரும், ஆசிரிய நலன்புரி மன்றத் தலைவரும், கல்லூரி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றி வந்தவருமாகிய

## திரு செல்லையா சண்முகநாதன்

அவர்களின் திடீர் மறைவினால் மனமிகவேங்கி நிற்கும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
பெற்றார் ஆசிரியர் சங்கத்தினர்,
இணுவில் இந்துக் கல்லூரி.

(37725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணை எதிர்ப்பு உபகரணம்: படையினர் பேசுவது கேலிக்கூத்து!

## ஹரி குணதிலக கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 26

புலிகளிடம் உள்ளது எந்த வகையான ஏவுகணை என்பதை இன்னமும் கண்டறிய முடியாத நிலையில் உள்ள போது ஏவுகணை எதிர்ப்பு உபகரணங்கள் பற்றிப் பாதுகாப்பு வட்டாரங்கள் பேசுவது கேலிக்கிடமானதாக உள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னைநாள் விமானப் படைத்தளபதி ஹரி குணதிலக.

'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

புலிகள் இதுவரை 3 விமானங்களை ஏவுகணைகளால் சுட்டு வீழ்த்தி உள்ளனர்.

இதுவரை, அவர்களிடம் எந்த ரக ஏவுகணைகள் உள்ளன என்பதை அறிய பாதுகாப்பு வட்டாரங்களால் முடியவில்லை.

இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளிடம் உள்ளன.

அவர்களின் ஏவுகணைகளுக்கும், கரும்புலித்தாக்குதல்களுக்கும் பாதுகாப்புப் படையால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில், ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கை மூலம் வடக்கில் 78 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றி உள்ளதாகக் கூறப்படுகிறது.

புலிகளை அழித்தொழிப்பதே இந் நடவடிக்கையின் நோக்கம் என்றும் கூறப்பட்டது.

அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பதே இன்றுள்ள கேள்வி.

இந்த நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 63 பேர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

ஆனால், புலிகள் திருப்பித் தாக்கிய போது, விமானம் ஒன்றையும், ஒரு கப்பலையும் 100க்கும் மேற்பட்ட சிப்பாய்களையும் படையினர் இழந்துள்ளனர்.

இதைவிட காணாமல் போன படையினர் எண்ணிக்கை என்ன என்பதே தெரியாது: இது பற்றிய தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

10ஆயிரம் படையினர் மேற்கொண்ட 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையில், 63 புலிகள் மட்டுமே கொல்லப்பட்டனர்.

இவ்வாறு தளநிலை இருக்க, "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை வெற்றி என்று எவ்வாறு கூறமுடியும்?

ஓகஸ்ட் மாதம் அல்லது செப்ரம்பர் மாத முற்பகுதிக்குள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதும் — அதற்கு வசதியாக காரைநகருக்கும், பலாலிக்கும் இடையில் தரைவழிப் போக்குவரத்தை ஏற்படுத்துவதும் —

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் — முதலாம் கட்டத்தின் நோக்கம் என்று கூறப்பட்டது.

ஆனால் எனது 30 ஆண்டு கால இராணுவ அனுபவத்தில், இந்த முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் பலாபலனை வைத்துப் பார்க்கும் போது, இவ்வாறான நீண்ட தரை வழிப்பாதையை பேணுவது என்பது, இராணுவத்திற்கு கடினமானதாகவே இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ-10)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 26

நாளை வியாழக்கிழமை ஆடி அமாவாசை தினத்தை ஒட்டி, வில்லூன்றி புனிதத் தீர்த்தத்தில் பொது மக்கள் தீர்த்தம் ஆடுவதற்கும், பிதிர்க் கடன்களைச் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

துப்புரவு வேலைகளுக்காக தீர்த்தக் கேணிப் பாவனை இன்று (புதன்) நிறுத்தப்பட்டுள்ளது: எனினும் அந்தியேட்டிக் கிரியைகள் வழமை போல் நடைபெறும். (எ)

## அல்வாயில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 26

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய 1008 சங்காபிஷேகம் இன்று காலை 10.00 மணி முதல் நடைபெறும்.

பின்னர் அல்வாய் முருகுப்பிள்ளை முத்தம்மான் எழுதிய ''அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் அர்ச்சனை மலர்கள்'' என்ற நூல் வெளியீடு இடம்பெறும்.

நண்பகல் 1-00 மணிக்கு அன்னதானமும் இரவு 9-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறும்.

## ஆசிரியருக்கான ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டுப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள வலிகாமக் கோட்ட ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நாளை வியாழன் காலை 9 மணிக்கு, திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் உள்ள சின்ன முத்துத் தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும்.

இதன்போது 6 ஆம் மாதத் திற்குரிய ஊதியம் வழங்கப்பட உள்ளதுடன்முக்கியமான விடயங்களும் கலந்துரையாடப்பட உள்ளன. [எ]

## இனப் படுகொலையை கண்டித்து இங்கிலாந்து தமிழர்கள் ஜோன் மேஜருக்கு மகஜர்

லண்டன், ஜூலை 26

விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுதல் என்ற போர்வையில் நடைபெறும் தமிழர்கள் மீதான இனவதை நடவடிக்கையை பிரிட்டனில் வாழும் தமிழ்மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் இந்த நெருக்கடியான நேரத்தில் உங்கள் ஆதரவும் அவசர நடவடிக்கையும் தேவைப்படுகின்றன.

ஐக்கிய ராஜ்ய தமிழ் நடவடிக்கைக் கமிட்டியின் தலைவர் திரு. எஸ். மாகாராஜசிங்கம்பிரதமர் ஜோன் மேஜருக்கு இம்மாதம்15ஆம் திகதி அனுப்பிய மகஜர்ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொஸ்னிய முஸ்லிம்களும் செச்னியர்களும் எதிர்நோக்கு வதைப் போன்று தமிழ்ப் பொதுமக்களும் மீண்டும் இனரீதியில் வதை செய்யப்படுகின்றார்கள். ஆனால் இது பற்றி தொடர்பு சாதனங்களும் தொலைக் காட்சியும் செய்திகளை வெளியிடவில்லை என்று மகஜர் மேலும் குறிப்பிட்டுள்ளது.

மேற்படி கமிட்டி ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஜூலை 9 ஆம் திகதி அனுப்பிய கடிதத்தின் பிரதியும் பிரதமர் ஜோன் மேஜருக்கு அனுப்பிய வைக்கப்பட்டுள்ளது.

''தமிழர் இரத்தத்தில் உங்கள் கரங்களைத் தோய்த்து எடுக்காதீர்கள் அது உங்களுடன் நிரந்தரமாகத் தங்கிவிடும்'' என்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கான கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழர் படுகொலையை உடனடியாக நிறுத்தும்படி கடிதம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது. (ஐ-க)

## புலிகளின் குரல் வானொலியில்

**26 - 07 - 1995**

**புதன் இரவு**

- ★ 8-02 — குயிலோசை — நிகழ்ச்சியில் ''வேலணையூர் சுரேஸ் எழுதிய ''தாயின்மடியில்'' கிராமிய நிகழ்வு
- ★ 8-20 — வாத்தியகானங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — ந. கிருஷ்ணா எழுதிய ''அவலம்''

**27 - 07 - 1995**

**வியாழன் காலை**

- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15— படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## அமெரிக்கப் பிரஜைக்கு 2 வார தடுப்புக் காவல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

கடந்த சனிக்கிழமை தாண்டிக்குளத்தில் வைத்து இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட அமெரிக்க பிரஜையும் தேசிய கிறிஸ்தவ மன்றத்தைச் சேர்ந்தவருமான கெனத்மல்டோனை 2 வாரங்களுக்கு தடுப்புக் காவலில் வைக்க கொழும்பு நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

அவசரகால சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட இவர், எதுவித விசாரணைக்கும் உட்படுத்தப்படாத நிலையில், நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் ஆஜராக்கப்பட்டார்.

இவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என உறுதிப்படுத்தக் கூடிய சில தடயங்கள் தமக்குக் கிடைத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.


வடபகுதி நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் தாண்டிக் குளத்தில் வைத்து படையினர் இவரைக் கைது செய்தது தெரிந்ததே. (இ-எ)

## பாலர் பாடசாலை ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26

கோப்பாய் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய கோட்ட பாலர் பாடசாலையின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 4-30மணிக்கு, பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா பொன்னம்மா**

தோற்றம்: 18 - 04 - 1927

மறைவு: 08 - 08 - 1991

திதி: 26 - 07 - 1995

மரம் அறுக்கும் வாள் போல் மனித
உயிரறுக்கும் வாழ் நாளை
எவராலும் தடுக்க முடியாது
இயல்பு இது காண் இவ்வுலகில்

அன்புத் தெய்வமே! எங்கள் உயிருள்ளவரை உம் பிரிவு ஆறாது. உங்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
இ. கலைச்செல்வன்
31, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

(37672)

## இராணுவ நடவடிக்கையின் போது அநியாயமாக மக்கள் பலியானதற்கு கனேடியத் தூதர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையில், பெருமளவிலான அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டது குறித்து, கொழும்பில் உள்ள கனேடியத் தூதர்கவலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆயர் அதி. வண. எஸ். ஜெபநேசன் [illegible] சென்று போர் அனர்த்தங்களை விளக்கியதுடன் இப்போரினால் அப்பாவிப் பொது மக்களே அநியாயமாகச் செத்துமடிகிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறினார்.

இவற்றை தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது வழி வகைகளை செய்யும்படியும் அவர் கனேடியத் தூதரைக் கேட்டுக் கொண்டார். அதன் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் கொழும்பில் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் தூதர்களையும் சந்தித்து, வடபகுதி நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

இதற்கு, தாம் அரசுடன் தொடர்பு கொண்டு இந் நிலையைத் தவிர்க்க முயல்வதாகவும், வடபகுதி நிலை தமக்கு வேதனை தருவதாய் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களுள், கனேடியத் தூதர் யாழ். மக்கள் மீதுகாட்டிய அன்பும் பரிவும் தன்னை நெகிழச் செய்ததாக ஆயர் தெரிவித்தார். [எ-4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு பெண் அல்சேசன் நாயும் (1½ வயது), ஒரு ஆண் அல்சேசன் நாயும் (6 மாதம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: C. செல்வராஜா, ஏபில் ஆங்கிலக் கல்வி நிலையம், சுதுமலை அம்மன் கோயில், சுதுமலை. (37708)

பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தேநீர்க்கடை, சட்டநாதர் சிவன்கோயில், முன்பாக. [37714]

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொது விவேகம்" 97/- வினாத்தாள் I, II ற்குரியது. வெளியீடு: அகிரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras Programmes Fixing Special, T. V. Antenna, Repairing Antennas, Radios-T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: KandyRoad, Chavakachcheri. (C-1686)

### கோழிக்குஞ்சு விற்பனை

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து 30-7-95 ஞாயிற்றுக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37704)

### தவறிவிட்டது

24-7-1995 அன்று கச்சேரி நல்லூர் வீதிக்கும், கண்டி வீதிக்கும் இடையில் சிறு தொகைப்பணம் தவறிவிட்டது. இதைக்கண்டு எடுத்தவர்கள் தயவு கூர்ந்து கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். க. கந்தையா, 47, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (37711)

## கேள்வி அறிவித்தல்

கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.

**யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்துக்குத் தேவையான தளபாடங்கள் வழங்கலும், விநியோகித்தலும் - 1995**

மேற்படி விடயம் சம்பந்தமாக 1995-06-26ஆம் திகதிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 1995 - 08 - 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் முத்திரையிடப்பட்ட கேள்விகள், தளபாட விநியோகஸ்தர்களிடமிருந்து 1995-08-16ஆம் திகதி காலை 10-00மணி வரை யாழ். கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 750/-ம், மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 30,000/-ம் ஆக மொத்தம் ரூபா 30,750க்கு "கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு வங்கிக் கட்டளையைச் சமர்ப்பித்து, உரிய பற்றுச் சீட்டினைப் பெற்று 1995 - 08 - 09ஆம் திகதி காலை 10-00மணிக்குமுன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1995-07-24. (சி-1942)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
லியோ கழகம்
சுன்னாகம் லயன் கழகத்துடன்
இணைந்து நடத்தும்
'உதயன்'
வெற்றிக் கிண்ணத்திற்கான

## பொது அறிவுப் போட்டி-95

மேற்படி போட்டிக்கான எழுத்துப் பரீட்சை 14-07-1995 நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாட்டு நிலைமை காரணமாக அதனை நடத்த முடியாது போய் விட்டது. எனினும் அப்பரீட்சையை பாடசாலை மூன்றாம் தவணையில் நடத்தத் தீர்மானித்துள்ளோம். எனவே விண்ணப்பங்களை அனுப்பாத பாடசாலைகளை அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி

லியோ சேவையில்

(சி-1943) — தலைவர்.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 13 — 10 — 1969



அந்நியர் அழிப்பு: 26 — 07 — 1989

**செல்வன் பரமகுரு ஸ்கந்தகுமார்**

(பழைய மாணவன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி)

திதி: 20 - 07 – 1995

எங்கள் அன்புச் செல்வமே! தம்பி!!
தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை
என்றும் பிரார்த்திக்கும்;

ஐயா, அம்மா, அக்கா,
உறவினர்கள், நண்பர்கள்

"முத்து மாளிகை"
பருத்தித்துறை. (37665)

## நினைவலைகள்

### 6ஆம் ஆண்டு



செல்வன்
**இராமசாமி**
**சிறிபத்மநாதன்**

தோற்றம்: 17 — 04 — 1966
மறைவு: 26 — 07 — 1989

யா / ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும், தேசிய தொழிற் பயிற்சி சபை டீசல்இயந்திரப் பொறியியல் மாணவனும் (வடபிராந்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறைச் சாலை)

அன்பின் திருவுருவே - எம்
ஆசைச் சிறியே
வறுமையிலும் வாடாத
பொறுமையின் பொக்கிஷமே
கடமை உணர்வின்
கருவாகி வளர்ந்தவனே
காலை வேளையிலே
சாலைக்கு சென்ற உன்னை
காலம் பார்த்திருந்த கயவர்
கண்முன் உன்முகம் பட்டதால்
கோரக் கொலை செய்தனரோ —
அண்ணா

### 4ஆம் ஆண்டு



திருமதி
**இராமசாமி**
**நற்குணம்**

தோற்றம்: 10 — 03 — 1938
மறைவு: 02 — 05 — 1991

பாசப் பூங்காவில்
பசுமையாய் மலர்ந்த
பாசத்துப் பைங்கிளியின்
நேசத்தால் - அன்னையும்
நித்திரை மறந்தாள் - அன்பே
நிஜமாகவே உன்பாதையை
அன்னையும் தொடர்ந்தாவே - எம்
அன்புத் தெய்வங்களே - எம்
நெஞ்சம் இருக்கும் வரை - உங்கள்
நினைவுகள் வாழ்ந்திருக்கும்

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அப்பா, சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள், கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

குரும்பசிட்டி, புலோலி தெற்கு. (37666)

## 1ம்- ஆண்டு நினைவஞ்சலி

(26 — 07 — 1995)

மண்ணில்: 04 — 11 — 1910



விண்ணில்: 26 — 07 — 1994

திருமதி
**றெஜீனா சொர்ணம் நவரத்தினசிங்கம்**

ஆளாக்கி எம்மையெல்லாம் அடிபெடுக்க-
வைத்துவிட்டு
மீளாத்துயில் கொண்ட எமதருமை அன்னையே!
நீங்காது உம் நினைவு எம்நெஞ்சில் என்றும்
தூங்காதுகண்களில் துளிர்த்திடும் நீர்த்துளிகள்

திருப்பலிகள் இன்று (26-07-95) புதன்கிழமை காலை 6மணிக்கு யாழ் அருள் ஆச்சிரமத்திலும், புனித அடைக்கல நாயகி ஆலயத்திலும் 11மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காகச் செபிக்கும் படி அனைவரையும் வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள் பேரர்.

பண்டத்தரிப்பு. (37697)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ உயர் அதிகாரிகள் மீது சீறிப்பாய்ந்தார் அமைச்சர் அனுருத்த

கொழும்பு, ஜூலை 26
கைப்பற்றும் பகுதியை தொடர்ந்து பாதுகாத்துத் தக்கவைக்க முடியாது என்பது தெரிந்திருந்தும் —

பெரும் எண்ணிக்கையான உயிர்ப் பலியுடன், இந்தளவு விசாலமான பகுதியை அரச படைகள் கைப்பற்றியது ஏன்?

இந்தக் கேள்வியை இராணுவ விமர்சகர்கள் கேட்பதாக நினைத்துவிடாதீர்கள்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையே தமது உயர்தர இராணுவ அதிகாரிகளிடம் இந்த வினாவை எழுப்பினார்.

படையினர் தாம் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து பின்வாங்கிச் சென்றது குறித்து பிரதி அமைச்சர் பெரும் அதிர்ச்சி அடைந்திருந்தார் என்றும் —

இராணுவம் அரசாங்கத்துக்கு அவமானத்தை உண்டு பண்ணிவிட்டதாக அவர் அந்த உயர் அதிகாரிகள் மீது சீறிவிழுந்ததாகவும் — ''சண்டே ஐலண்ட்'' பாதுகாப்புச் செய்தியாளர் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இவ்வாறு எரிந்து விழுந்த போது வடக்கு — கிழக்கு நடவடிக்கைத் தளபதி மேஜர் ஜெனரல் றொஹான் தலுவத்த, யாழ்ப்பாணத்துக்கான விசேட செயலணிப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியா, நடமாடும் படையணி மற்றும் விசேட படையணிகளின் தளபதி மேஜர் ஜெனரல் சிறி பீரிஸ் ஆகிய உயர் அதிகாரிகள் அங்கு பிரசன்னமாக இருந்தனராம்.

தாம் தாக்குதல் நடவடிக்கைக்குத் தயார் என்பதனைக் காட்டிக்கொள்ளும் ஆர்வத்தில், முந்திய இடத்துக்கே திரும்பிச்செல்ல நேரிடும் என்பதனை உணர்ந்து கொள்ளாமல் அளவுக்கதிகமான தூரத்துக்கு துருப்புகள் முன்னேறி விட்டதாகவே கருதத் தோன்றுகிறது — என்றும் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். [அ]

## துறைமுகத்தினுள் செல்ல அனுமதி கேட்ட மர்மகப்பல்

### கடற்படையினர் தேடுகின்றனர்

கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசிக்க முயன்ற மர்மக் கப்பல் ஒன்று குறித்து கடற்படை தனது தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது

கடந்த 21 ஆம் திகதி நள்ளிரவு கொழும்புத்துறைமுகத்துக்குள் வர அனுமதி கேட்டு விட்டு மறைந்து போன அந்தக் கப்பலைத் தேடும் பணி இன்னும் முடியவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

'ஜூனோ' என்று இனங் காணப்பட்ட இந்தக் கப்பல் சிங்கப்பூரில் வசிக்கும் ஓர் இலங்கைத் தமிழருக்கு சொந்தமானது என அறிய வருகின்றது

இந்தக் கப்பல் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதற்கு சமிக்ஞை காட்டியபோது துறைமுக அதிகாரிகள் அதன் பிரவேச நோக்கம் என்ன என்று வினவினார்கள். அனுமதி கிடைக்கும் வரை பாணந்துறை நோக்கிய கரையில் நங்கூரமிட்டு நிற்கலாம் என்றும் அறிவித்தார்கள்.

இந்த உத்தரவுகளை அக்கப்பல் உதாசீனம் செய்தபடியால் துறைமுக அதிகாரிகள் கடற்படையை அழைத்தார்கள்.

கடற்படை அதிகாரிகள் தற்பொழுது விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள். இதே கப்பல் கடந்த ஆண்டு முகத்துவாரக் கரைக்கு வந்து திரும்பியதாகவும், அதன் பின்னர் வெடிமருந்துகள் நிரம்பிய ''ஜாக்கெட்டுகள்'' அப்பகுதியில் மிதந்ததாகவும் அறியப்பட்டது.

வெடிமருந்துகளைக் கொண்டுவர தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தக் கப்பலைப் பயன்படுத்துவதாக மூத்த கடற்படை அதிகாரி ஒருவர் கூறியதாக 'த ஐலண்ட' தெரிவித்துள்ளது (க)

## வெற்றிலைக்கேணியில் 14 கப்பல்கள் தரிப்பு!

தென்மராட்சி, ஜூலை 26
வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முகாமை அண்டிய கடற்பகுதியில் 14 கடற்படைக் கப்பல்கள் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதங்கள்மற்றும் பொருள்கள் இக்கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கடலில் கப்பல்கள் தரித்து நிற்பதால் அப்பகுதியில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவித்தனர். [ஐ-117]

## பலாலிக்கு வந்து திரும்பிய "அன்ரனோவ்" விமானம்

கொழும்பு, ஜூலை 26
ரஷ்யத் தயாரிப்பான அன்ரனோவ் — 32 ரக ராட்சத போக்குவரத்து விமானம் சமீபத்தில் பலாலிக்கு கன்னிப் பயணம் மேற்கொண்டது

இந்த விமானம் பலாலியில் இருந்து திரும்பியபோது விமானத்தில் மேஜர் ஜெனரல் றொஹான் தலுவத்தவும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் அதில் கொழும்பு திரும்பினர் என்றும் —

கொழும்பு திரும்பிய றொஹான் தலுவத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஆகியோரை சந்திக்க உள்ளதுடன் தேசியபாதுகாப்புக் கவுன்சிற் கூட்டத்திலும்கலந்துகொண்டு வடக்கு ராணுவ நிலைமை குறித்து சிரேஷ்ட ராணுவ அதிகாரிகளுடன் பேச உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது [இ]

## அளவெட்டியில் இருவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 26
அளவெட்டிப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் காயமடைந்தனர்.

கோப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் வரதராசா, மானிப்பாயைச் சேர்ந்த கருணாகரன் சந்திரசேகரம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ-15-13]

## நவாலி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காணாமல் போதல். மர்மமான முறையில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டு வீசப்பட்ட சடலங்கள் போன்ற மனித உரிமை மீறல்கள் அக்குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு கேள்விகள் எழுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ஐ-4)

## பாடசாலை வளவில் வீழ்ந்த பீரங்கி குண்டுகள்

தென்மராட்சி, ஜூலை. 26
வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுக் கடலில் தரித்து நின்றபாரிய கடற்படைக் கப்பலிலிருந்து நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் ஏவப்பட்ட பீரங்கி குண்டுகள் செம்பியன்பற்று இந்துதமிழ்க் கலவன் பாடசாலை வளவில் வீழ்ந்து வெடித்தன.
(ஒ-117)

## பரீட்சை காகிதாதிகள் கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 26
தற்சமயம் பருத்தித்துறையில் மா இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹபரண' கப்பல் இன்று திருகோணமலைக்கு திரும்பிச் செல்கிறது

எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கான காகிதாதிகளை ஏற்றிக்கொண்டு அக்கப்பல் உடன் பருத்தித்துறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது (ஒ-3)

## யாழ். நகரைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குடாநாட்டுக்கும் இடையே படகுச்சேவை ஒன்றை ஆரம்பிக்கவும்—

மண்டைதீவிலிருந்து தொண்டமானாறு நீரேரி வரை மேற்குச் சுற்றுப் பக்கமாக தரைப்பாதை ஒன்றைத் தக்கவைக்கவும் இராணுவம் திட்டம் தீட்டியிருந்தது.

ஆனால் ஜூலை 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய ''புலிப்பாய்ச்சல்'' அதிரடித் தாக்குதல் இத்திட்டங்களை குலைத்துவிட்டதாக அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [உ-க]

## புத்தளத்தில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சமன்சில்வ ஆகியோர் அடையாளம் காணப்பபட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு மேலதிக துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

வில்பத்து சரணாலயப் பகுதியில் புலிகளின் தாக்குதல் அணியைத் தேடி தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் —

அரசுத் தரப்பில் அறிவிக்கப் பட்டது.

## கலந்துரையாடல்

வலி. மேற்கு. ஜூலை 26
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவசரகால நிலைமை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் திரு. க.பொன்னம்பலமும், செயலக உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-175)

## மாவீரருக்கு வீர வணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் கடந்த 24 ஆம் திகதி ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை அறிவு/நிமலனின் (செல்வராசா சுதாகரன் புன்னாலைக்கட்டுவன்) வித்துடல் இன்று பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்களின் இறுதி வீரவணக்கத்திற்கு வைக்கப்படும். அங்கு பி.ப. 3 மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும் பின்னர் பூதவுடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும். [ஒ]

## முதலுதவி பயிற்சி பெறும் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 26
செங்குந்தா இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, புங்குடுதீவு மகளிர் மகாவித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், கந்தர்மட சைவப்பிரகாச வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் முதலுதவிப் பயிற்சி பெறும் மாணவர்களையும் நல்லூர் உற்சவகாலத்தில் சேவையாற்றவுள்ள சகல மக்கள் நலன்புரி சங்க தொண்டர்களையும் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் ஒன்று கூடுமாறு மக்கள் நலன்புரி சங்கம் கேட்டுள்ளது. (ஒ)

## பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சி

கொழும்பு, ஜூலை 26
''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையகத்தின் பொதுசனத் தொடர்பு பிரிவு நடந்து கொண்ட விதம், பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிபுணத்துவம் இல்லாமல் இராணுவ பொதுசனத் தொடர்புப் பிரிவு ''அமெச்சூர்'' தனத்துடன் நடந்ததாக அவர்கள் கருதுகின்றனர்.

பொதுசனத் தொடர்புப் பிரிவு நம்பகத் தன்மையை வெளிப்படுத்துவதாகவும், நிபுணத்துவத்துடனும் செயற்பட்டிருக்கவேண்டும் என்று குறிப்பிட்ட அவர்கள், இல்லையேல் அரசின் நம்பகத்தன்மையே பாதிக்கப்பட்டுவிடும் என்றும் சுட்டிக்காட்டினர். (உ)

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மலையைக் கெல்லி எலியா?

மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை போல— சந்திரிகா அரசின் இனப்பிரச்சினைக்கான தீர்வும். மாகாண சபைகளுக்கு பரவலான அதிகாரங்களை வழங்கும் திட்டமாகவே இருக்கப் போகிறது!

சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் - பொதுத் தேர்தல் பிரசார காலத்தில்— இனப்பிரச்சினைக்கு மாநில சபைகள் கொண்ட சமஷ்டித் தீர்வு ஒன்று கொண்டு வரப்படும் என்று எவரும் நம்புயவிதத்தில் இப்போதைய ஆளுங்கட்சியின் பிரசாரம் அமைந்திருந்தது.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்த பின்னர் அதன் அமைச்சர்களும், அதனுடன் நெருங்கிய முக்கியஸ்தர்களும் வெளியே சமஷ்டி என்று பெயர்சூட்டாத சமஷ்டிக் குரிய அம்சங்களைக்கொண்ட தீர்வு ஒன்றையே அரசு தயாரித்து வருவதாக மறைமுகமாகக் கூறி வந்தனர்

ஆனால் அரசு தனது சொந்தத் தீர்வுத் திட்டம் என்று சொல்லக்கூடிய யோசனை ஒன்றை ஜூலை முதல் வாரம் வரை எழுத்தில் பதிக்கவில்லை என்பதே சரியான நிலையாகும்.

அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை முறிந்த பின்னர் —

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்தல்; அரசியல் தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்துதல்; வடக்கில் புனர்வாழ்வு — புனரமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தல் — என்ற மூன்று அம்சத் திட்டம் ஒன்றை அரசு வகுத்தது.

அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே போரின் ஊடாகச் சமாதானத்தைக் காணப் போவதாகச் சந்திரிகா புலம்பிக் கொண்டிருந்தார். இப்போது போரில் தோற்றாலும் அடுத்த வாரத்தில் தனது 'பொன்னான' தீர்வு யோசனையைப் பகிரங்கப்படுத்தப் போகிறாராம்! பரவலான அதிகாரம் என்ற சொற்பதத்தால் தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாமா, என்ன?

பிறர் தலையீடோ, அழுத்தமோ இன்றி, தங்கள் அலுவல்களைத் தாமே நிர்வகிக்கவும், தங்கள் வாழ்வையும், வளத்தையும் தாமே நிர்ணயிக்கவும் வகை செய்யும் தன்னாட்சி உரிமை வழங்காத எந்தத் தீர்வையும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இது சந்திரிகா அரசுக்குத் தெரியாமல் இல்லை. அதனாலேயே அவர் தனது உயிரற்ற தீர்வு யோசனையைத் திணிப்பதற்காக போர் நடத்தத் தீர்மானித்தார். நடத்தினார்; தோல்வியுற்று விட்டார். எனினும் வெற்றுப் பெட்டியைத் திறந்து காட்டப் போவதாகக் கூறுகிறார்.

இவருடைய பம்மாத்தில் தமிழர்கள் ஏமாறப் போவதில்லை. ஏமாறமாட்டார்கள் என்பதனை முன்கூட்டியே எச்சரிக்கின்றோம். அரசின் இந்த அணுகுமுறை தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம்தான் தீர்வு என்பதனை மேலும் வலுவடையச் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு விரைவில் எதிர்பாருங்கள்

**'வேரும் விழுதுகளும்'**

ஓர் கல்வியியற் கண்காட்சி

— செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்

(37724)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பரஞ்சோதி

(பொறியியலாளர், கட்டடத் திணைக்களம் கொழும்பு)
(Executive Engineer, Building Dept. Colombo)
(யாழ். சென். பற்றிக்ஸ் பழைய மாணவர்)

இலக்கம் 37, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 30/8, கம்டன் லேன், வெள்ளவத்தையை வதிவிடமாகக் கொண்டவருமான செல்லையா பரஞ்சோதி 24-7-95 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் திரு. திருமதி செல்லையாவின் அருமை மகனும், யசோதராவின் அன்புக் கணவரும், அகிலா, பிரிந்தா, பகீரதி ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு. யோகபண்டிதவின் அன்பு மாமனாரும், அர்ஜுனின் அன்புப்பேரனும், கல்வளை, சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி தலையசிங்கத்தின் அன்பு மருமகனும், திருமதி மகேஸ்வரி நடராசா, திரு. தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் உள்ள 30/8, Hampden Lane, வெள்ளவத்தையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி நடராசா
(சகோதரி)
திரு. செல்லையா தெய்வேந்திரன
(சகோதரன்)
(யாழ். மாநகர சபை சுகாதாரப்பகுதி)

37, கொழும்புத்துறை, வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (சி/1945)

## இராசையா குலேந்திரன்

பெருமாக்கடவை அளவெட்டியைச் சேர்ந்த இராசையா குலேந்திரன் (K. G. Industries) அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசையா - சோதிமதியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மதுரத்தின் அன்புக் கணவரும், கல்யாணி (பல் மருத்துவபீடம், பேராதனை), ஆதித்தன் (2 ஆம் வருடம் A பௌதிக விஞ்ஞானம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சிவாம்பிகை கணேசன், இராசையா குகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26-7-95 முற்பகல் 10 மணியளவில் கீழ்வரும் விலாசத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. ஆதித்தன்
(மகன்)

வே. நடேசபிள்ளை,
30, டயஸ் வீதி.
(யாழ். கலைப்பீடத்திற்கு பின்னால்)
திருநெல்வேலி. (37729)

## திருமதி
## சூசானம்மா சந்தியாப்பிள்ளை

(மாணிக்கம்-சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது உடையார் கட்டில் வசித்து வருமாகிய சூசானம்மா சந்தியாப்பிள்ளை 4-7-95 உடையார் கட்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் அன்புமனைவியும், மாகிறேட், மரியநாயகம், றெஜீஸ், யூலியற் ஆகியோரின் அன்புத்தாயாரும், A. மரியநாயகம், B. மரியநாயகம், அன்ரன் விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், சுறேஜினி (3 ஆம் வருட விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்), சுறேஷ், றுபேஜினி, றுபேஷ், சுபதினி, துஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 6-7-95 இல் உடையார் கட்டில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விஜயகுமார்
(மருமகன்)

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

(37733)

## வீடியோ பட வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26

நிதர்சனமும் மட்டு - அம்பாறை சிறப்புப் படையணியும் இணைந்து தயாரித்து வழங்கும் சி.சேரனின் 'உறங்காத கண்மணிகள்' வீடியோ பட வெளியீட்டு விழா நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கில் இடம்பெறும் (ஓ)

## மண்டைதீவு முகாம் மாதிரி காட்சிக்கு

தென்மராட்சி, ஜூலை 26

விடுதலைப் புலிகளால் தகர்த்தழிக்கப்பட்ட மண்டைதீவு இராணுவ முகாம் மாதிரி காட்சி அமைப்பு நேற்று சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு முகாம் தகர்ப்பின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒரு தொகுதியும், இப் பகுதியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்களும் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரனின் முழு உருவப்படமும் வைக்கப்பட்டுள்ளன. [ஓ-117-31]

## கல்விக்கழக ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். நல்லூர் கல்விக் கோட்ட கல்விக்கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழன் பி. ப. 3-00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற விருப்பதால் சகல கல்விக்கழக ஆசிரியர்களையும் வருகை தரும்படி கல்விக்கழகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

## மருதங்கேணி கல்விக் கோட்ட கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 26

முன்னர் அறிவிக்கப்பட்டபடி மருதங்கேணி அலுவலகர், அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழியர்களுக்கான நிதியம் சம்பந்தமான கூட்டம் இன்று மு. ப. 10 00 மணிக்கு செம்பியன் பற்று அ. த. க பாடசாலையில் நடைபெறும் என கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

### முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்ட உடற்கல்விப் பணிப்பாளர், தாதி தரம் 2 (பெண்), பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தரம் 2 (ஆண்), களஞ்சியப்பொறுப்பாளர் தரம் 111 (ஆண்) ஆகிய பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 1995 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
[illegible]
1995-07-24

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

மட்டு. அம்பாறை சிறப்புப் படையணியும்,
நிதர்சனமும் இணைந்து
வழங்கும்

**சி. சேரனின்**

**உறங்காத கண்மணிகள்**
(முழுநீள திரைப்படம்)

**திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,**
**நிதர்சனம், தமிழீழம்.**

[சி-1917]

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை ஆறுமுகம்

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை ஆறுமுகம் 8-7-95 இல் காரைநகரில் காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், சிறீஸ்கந்தராசா, சகுந்தலாதேவி, இராசம்மா, தங்கமுத்து, ஞானசவுந்தரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலட்சுமி, கந்தையா, கந்தசாமி, சண்முகராசா, விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் இடம்பெற்றன.

தகவல்;
செ. சண்முகராசா
(மருமகன்)

''ராணி வாசா''
துணைவி, சங்கரத்தை. (37722)

## தம்பிப்பிள்ளை சிவகுரு

(மதியாபரணம்)
(இளைப்பாறிய அதிபர்)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சிவகுரு (மதியாபரணம்), (இளைப்பாறிய அதிபர்) 24.07.95 இல் காலமாகிவிட்டார்.

இவர் இளைப்பாறிய ஆசிரியை இராசம்மாவின் அன்புக் கணவரும், மதிவதனா, இராசவதனி, ரதினி (கலா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகலிங்கம் (நெடுங்கேணி பிரதேச செயலகம்), பேரம்பலம் (அதிபர், ஓமந்தை மத்திய மகாவித்தியாலயம்), சுந்தரலிங்கம் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீத்தா (யாழ். மாநகர சபை) சுனித்தா, அஜந்தா (வேம்படிமகளிர் கல்லூரி), அனுசன், சுஜீவன், தாஸ்குமார், (யாழ் இந்துக்கல்லூரி) அனுசா, தசானி, (இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் கண்மணி, அன்னலட்சுமி, இராசமணி, சின்னத்தம்பி, பாலசிங்கம் [இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.07.95) புதன் காலை 10 மணிக்கு இல. 64, அரசடி வீதி யாழ்ப்பாணத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவகுரு இராசம்மா (மனைவி)

64, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (37732)

## செல்லையா சண்முகநாதன்

(யா / இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த செல்லையா சண்முகநாதன் அவர்கள் நேற்றுக் காலை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ் சென்ற திரு திருமதி செல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், திரு திருமதி நடராசா தம்பதிகளின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், வாகினி, கபிலவாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, செல்வரத்தினம், மனோன்மணி, இராஜேஸ்வரி, லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(27-07-95) வியாழன் முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லோ. செந்தூரன்
(பெறாமகன்)

இணுவில் மேற்கு,
இணுவில். (37737)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org